**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.121/2022
Prosecution witness.6

| | |
|---|---|
| பெயர் : ராணி | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17th day of February 2025.

17.02.2025

(எதிரிகள் 1 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை. 1 முதல் 4 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். சுமார் 4 வருடங்களுக்கு முன்பாக தேதி, மாதம் நினைவில் இல்லை காலை 06.00 மணிக்கு நான் கீழத்தூவலில் உள்ள தேனீர் கடைக்கு நானும் எனது கணவர் அ.சா.1 சேதுராமனும் சென்ற போது உன்னால்தான் எனது மகள் வாழா வெட்டியாக இருக்கிறார் என்று கூறி 1ம் எதிரி ஜப்பான் என்ற முனியசாமி, 4ம் எதிரி முனியக்காள், 2ம் எதிரி பழனியம்மாள், 3ம் எதிரி மாரி, முருகன், முத்துலட்சுமி ஆகியோர் எங்களை வழிமறித்து என்னை கட்டையால் அடித்தார்கள் எனது கணவர் அ.சா.1யை கத்தி கம்பால் ஜப்பான் (எ) முனியசாமி வெட்டினார். அதில் எனது கணவருக்கு தலையிலும், கையிலும் காயம் ஏற்பட்டது. எனக்கு உடல் முழுவதும் காயம் ஏற்பட்டது.

2) பின்பு எனக்கும் எனது கணவர் அ.சா.1 க்கு ஏற்பட்ட காயத்திற்கு பரமக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டு மேல் சிகிச்சைக்காக மதுரை

இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்று கூறியதன் பேரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.